தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1981 ஏப்ரல் 21
சித்திரை 9, துன்மதி திருவள்ளுவர் 2012.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.''

கையால் தொழில் செய்து உணவு தேடி உண்ணும் இயல்புடைய தொழிலாளர், பிறரிடம் சென்று இரக்கமாட்டார்; தம்மிடம் இரந்தவர்க்கு ஒளிக்காமல் ஒரு பொருள் ஈவார்.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. ஓ. கோரன் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஓ. கோரன் அவர்கள், 16-4-1981ஆம் தேதியன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ஓ. கோரன் அவர்கள் 1952ஆம் ஆண்டிலிருந்து 1956ஆம் ஆண்டுவரை, அதாவது 1956ஆம் ஆண்டு மாநிலங்கள் திருத்தியமைப்புச் சட்டம் 1-11-1956ஆம் தேதியிலிருந்து அமலுக்கு வரும் வரை, ஆலத்தூர் (தனி) தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் இவர் 1969ஆம் ஆண்டில் கேரள மாநிலத்தில் திரு. அச்சுத மேனன் அமைச்சரவையில் வேளாண்மை மற்றும் நீர்ப்பாசன அமைச்சராகப் பணியாற்றி உள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்).

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கீழக்கரை பால் விநியோகச் சங்கம்.

*வினா எண். 812—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழக்கரை பால்விநியோகச் சங்கத்தில் ரூ. 12 ஆயிரம் கையாடல் நடைபெற்றுள்ளதாக அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது ?

(இ) கையாடல் பணம் வசூலிக்கப்பட்டதா ?

(ஈ) கையாடல் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா ?

(உ) என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) சங்கத்தில் 1977–78ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை முடிக்கப்பட்டது. தணிக்கையாளருடையத் தனி அறிக்கையின் பேரில் சங்கத்தின் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அந்த விசாரணையில் சங்கத் தலைவர் மற்றும் சங்கக் கணக்காளர் ஆகியோர் ரூ. 12,900 தற்காலிகக் கையாடல் செய்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.